(5) அரசினர் தீர்மானம்.

மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் அதிகக் கடனாக இருக்கும் தொகையை முடிவு செய்யும் செயற்குறிப்பு குறித்து.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, " 1948-ம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 65-வது பிரிவின் (1) உட்பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக நூற்று ஐம்பது கோடி ரூபாய் இருக்கலாம் என்று மேற்படி சட்டத்தின் அதே பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்கப்படலாம்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) வரவு-செலவுக் கூட்டத் தொடரில் பேரவை நிகழ்ச்சிகள் பற்றிய புள்ளி விவரங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடந்த மார்ச் மாதம் 1-ம் தேதி துவங்கி நடைபெற்றுவரும் இந்தப் பேரவையின் கூட்டத் தொடர் இன்றோடு முடிவடைகிறது. பலமுறை காரசாரமான விவாதங்களும், குற்றச்சாட்டுகளும், எதிர் குற்றச்சாட்டுகளும் இருந்தாலும் விவாதங்கள் மிக அமைதியான சூழ்நிலையில் மிகவும் ஆக்கபூர்வமாக நடைபெற்றன. வெப்ப நிலைமை வெளியே இருக்கிறது. இது கோடை காலம். இருந்தாலும் வெப்பத்திற்கு பதிலாக இங்கே ஒளி ஊட்டுகிற விவாதங்களாகத்தான் அமைந்தன—கொஞ்ச நேரம் வெப்பம் சிறிது தலைகாட்டினாலும்—என்பதற்காக உண்மையிலே இந்த மாமன்றமும், இம் மாமன்றத்தின் பேரவைத் தலைவன் என்ற முறையில் நானும் ரொம்பவும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

தமிழ் நாடு சட்டப் பேரவை எப்போதும் கண்ணியத்திற்கும், கட்டுப்பாட்டிற்கும், சட்டப் பேரவையின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் பெயர்பெற்றதாகும். எந்தச் சூழ்நிலையிலும் அதற்கு ஊறு நேரிடாமல் இன்னமும் நல்ல வகையில் ப்ாராளுமன்ற ஜனநாயகத்தை உயர்த்துகிற முறையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நடந்து கொண்டது பாராட்டுக்குரியதாகும். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களையும் எதிர்வரிசையில் உள்ளவர்களையும் இதற்காக நான் மனமாற பாராட்டுகிறேன்.

இன்னும் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் ரொம்ப முக்கியமான குறிப்பிடத் தகுந்த வெற்றிகளையும் பெற்றிருக்கிறது என்பதைக் குறித்து நாம் பெருமைப்படலாம்.

இந்தத் தொடரில் 656 கேள்விகள் கேட்கப்பட்டு விடைகள் அளிக்கப் பட்டன. அவற்றிற்கு ஏராளமான உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்டார்கள். 2,152 துணைக் கேள்விகளுக்குப் பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஆக, மூலக் கேள்விகள் 656-க்கும், 2,152 துணைக் கேள்விகளுக்கும் பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன.

இதைவிட எந்த நாட்டு சட்டமன்றத்திலும் நடக்காத ஒரு பெரிய நிகழ்ச்சி இந்தச் சட்டமன்றத் தொடரில் 157 அட்ஜேர்ண்மென்ட் மோஷன்ஸ், ஒற்றி வைப்புத் தீர்மானங்கள் வரப்பெற்றன. இவற்றில் 74 ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் பேரவையில் கொண்டுவரப்பட்டு இங்குதான் அனுமதி மறுக்கப் பட்டது.

41-வது விதியின்கீழ் 11 அறிக்கைகள் அளிக்கப்பட்டன.

மொத்தம் 866 வெட்டுத் தீர்மானங்களை உறுப்பினர்கள் கொடுத்தார்கள். அவற்றில் 126 வெட்டுத் தீர்மானங்கள் இந்த மன்றத்தில் முன்மொழியப் பட்டன.

இது நிதிநிலை அறிக்கை விவாத சம்பந்தமான கூட்டமாக இருந்தாலும் இந்தக் கூட்டத் தொடரில் 22 மசோதாக்கள் இம்மன்றத்தின் முன் வைக்கப் பட்டு 16 மசோதாக்கள் இங்கு நிறைவேற்றப்பட்டுள்ளன. நான்கு மசோதாக்கள் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளன. இரண்டு அறிமுகம் செய்யப்பட்ட நிலையில் உள்ளன.

இந்த சட்டமன்றத் தொடர் மொத்தம் 29 நாட்கள் கூடியுள்ளது. இன்னும் கொஞ்சம் கூட்டினுல் ஆறு நாட்கள் மாலை வேளையிலும் கூடியிருக்கிறது. 29 நாட்களோடு ஆறு நாட்கள் மாலை வேளையிலும் மன்றம் கூடியிருக்கிறது.

இன்னொரு முக்கிய அம்சம் என்னவென்றால், மிகப் பெரிய சிறப்பான அம்சம் என்னவென்றால், ஒரு நாள் சட்டமன்றம் காலை ஒன்பது மணி அளவில் துவங்கி இரண்டு மணி நேர இடைவெளியோடு 12 மணி நேரம், இரவு 9 மணி வரையில் நடைபெற்றிருக்கிறது. மொத்தத்தில் சொல்லப்போனுல் இதுவரையில் 155 மணி நேரம் இந்தச் சட்டமன்றம் தன் நிகழ்ச்சிகளை இந்தத் தடவை நடத்தி யிருக்கிறது.

1972 ஏப்ரல் 6] *[பேரவைத் தலைவர்]*

இவற்றிற்கெல்லாம் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு சட்டப்பேரவை முன்னவர் அவர்களுக்கும், மற்றைய அமைச்சர்களுக்கும், எதிர்வரிசையில் இருக்கிற தலைவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் என் பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவற்றுடன் இந்தப் பேரவைக் கூட்டம் நடப்பதற்கு உதவியாக இருந்து சிறந்த முறையில் பணியாற்றிய சட்டப் பேரவைத் துறைச் செயலாளர் திரு. சி. டி. நடராஜன் அவர்களுக்கும், மற்றும் அவர்களுடன் பணியாற்றும் துணைவர்களுக்கும், அதிகாரிகளுக்கும், பேரவைத் துறை அலுவலர்களுக்கும், தலைமைச் செயலக அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், எல்லோருக்கும் இப்பேரவையின் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பேரவை இத்துடன் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர் பேரவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

(6) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. *Statutory Rules and Orders.*

105. Notification issued with G.O. R. No. 402, Revenue, dated the 25th February 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by Thirumathi G. Savithri in aid of National Defence Fund. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939.)]

106. Notification issued with G.O. R. No. 338, Revenue, dated the 10th February 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Honorary Secretary, Bharat Scouts and Guides, Madurai District Association Madurai. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939.)]

107. Notification issued with G.O. R. No. 2161, Revenue, dated the 30th November 1971, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Chair-